# ஆஸி. மனித உரிமைகுழு மத்தியஸ்தம் வகிக்கும்?

(கன்பரா) இலங்கை பிரச்சினையில் அனுமதியளிக்கும் சாத்தியம் 'ஆஸ்திரேலிய மனித உரிமை பெருமளவில் அதிகரித்துள் குழு மத்தியஸ்தம் வகிக்க ளது, ஆஸ்திரேலிய பிரதமரும், காமன்வெல்த் செயலரும்
(4-ம் பக்கம் பார்க்க)

12-5-1991

விலை ரூபா 4-50


# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 சித்திரை 29 ஷவ்வால் 26 இதழ்: 91

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 12-5-1991


## யூன் மாதம் வரை தாக்குதல் தீவிரமாகும்

(கொழும்பு) வடக்கு - கிழக்குப் பகுதியில் யூன் மாத முடிவிற்குள் இரா ணுவம் தமது நிலையை எவ் வளவு பலப்படுத்த முடியுமோ அவ்வளவிற்கு தாக்குதலை தீவிரப்படுத்துமென 'வெரித் தாஸ்' தெரிவித்துள்ளது. யூன் மாதம் முடிவடைந்
(4-ம் பக்கம் பார்க்க)

## படை முகாமருகில் இரு சடலங்கள்

(மட்டக்களப்பு) மட்டக்களப்பு வெளி இராணுவ முகாமுக்கு அருகில் அடையாளம் காணப் பட முடியாத நிலையில் இரு வெவ்வேறு சடலங்கள் நேற்று முன்தினம் கிடந்தன.
(4-ம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி தேர்தலில்

# தேர்தல் விதிகள் மீறப்பட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு!

(கொழும்பு)

நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேர்தல் விதிமுறைகள் மீறப்பட்டு முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாக எதிர்க்கட்சிகள் அரசுமீது குற்றம் சாட்டியுள்ளன. தேர்தலின்போது என்ன மாதிரியான விதிமுறைகள் மீறப்பட்டன என்பது பற்றியோ என்னவகையான முறைகேடுகள் இடம்பெற்றன என்பதுபற்றிய விபரங்களோ எதிர்க்கட்சியினர் தரப்பில் இதுவரை விபரமாகத் தெரிவிக்கப்படவில்லை.

எனினும் நேற்றைய தேர்தல் அசம்பாவிதம் எதுவும் இன்றி அமைதியான முறையில் இடம்பெற்றதாகவும் தேர்தலின்பின் வன்முறைகள் இடம்பெறுவதைத் தடுக்கும் விதமாக ஏற்கனவே தளர்த்தப்பட்ட அவசரகால சட்ட
(4ம் பக்கம் பார்க்க)

## அவசரகால சட்டவிதிகள் மீண்டும் அமுலில்

[கொழும்பு] உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு நாட்டின் தென் பகுதியில் தளர்த்தப்பட்டிருந்த அவசரகாலச் சட்ட விதிகளின் சில பகுதிகள் நேற்று சனிக்கிழமை நள்ளிரவுமுதல் மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

நேற்றைய தினம் உள்ளூராட்சித் தேர்தல் முடிவடைந்ததையடுத்து தேர்தலின் பிறகு அசம்பாவிதங்கள் எது
(4-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தேர்தல்! தமிழ் அமைப்புகள் எதிர்ப்பு

(கொழும்பு) கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபை தேர்தல்களை நடாத்த அரசு முயற்சித்து வருவதை பல தமிழ் அமைப்புகள் எதிர்த்துள்ளன.

இது குறித்து இவ் அமைப்புகள் ஜனாதிபதிக்கு கடிதங்களை அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கில் நிலைமை மோசமாயிருப்பதாகவும், தமிழர் பெரு மளவில் அங்கு இல்லாதிருப்பதாலும் தேர்தலை நடாத்த வேண்டாமென்றும் அவை கோரியுள்ளன. (சி)

## ஐ. தே. க. முன்னணியில்

(கொழும்பு) நேற்று இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இதுவரை அறிவிக்கப்பட்ட முடிவுகளின்படி ஐக்கியதேசிய கட்சி முன்னணியில் நிற்கிறது. இன்று அதிகாலை இரண்டு மணிவரை கிடைத்த முடிவுகளின்படி ஐக்கியதேசியக்கட்சி மொத்தம் 9 உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கிறது.

முதலாவது தேர்தல் முடிவு நேற்று நள்ளிரவு 12-15 மணியளவில் அறிவிக்கப்பட்டது. பதுளை மாவட்டம் ஹப்புத்தளை நகரசபையின் முடிவு முதலில் வெளியிடப்பட்டது.

முடிவுகள் வருமாறு:

★ பதுளை மாவட்டம்: ஹப்புத்தளை நகரசபை; ஐ.தே.க: -7 அகில இ.த.க-ஐக்கிய முன்னணி -? (அகிகத்தவர், சுயேட்சை-I -2)

★ கம்பஹா மாவட்டம்- கம்பஹா நகரசபை: ஐ.தே.க. -6, சுதந்திரக் கட்சி- 3.

★ கண்டி மாவட்டம்- கடுகண்ணாவ நகரசபை: ஐ.தே.க.
[4-ம் பக்கம் பார்க்க]

## புலிகளை வெல்ல முடியாது அநுரா அரசுக்கு அறிவுறுத்து

(கொழும்பு) விடுதலைப் புலிகளை ஒரு நாளும் தோற்கடிக்க முடியாது அவர்களது பலம் அதிகரித்தே வருகிறதென சுதந்திரக் கட்சி எம்.பி திரு. அநுராபண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். இரத்தினபுரியில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்; வடக்கு-கிழக்கில் நாளொன்றுக்கு பத்து, பதினைந்து படையினர் கொல்லப்படுகிறார்கள் அண்மையில்
(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழர் தம்மை காப்பாற்ற இந்தியா உதவ வேண்டும்

(சென்னை) "இலங்கைத் தமிழர்கள் மீது இனப்படுகொலை தொடர்ந்தால் அவர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட இந்தியா உதவியளிக்கவேண்டும்."

இவ்வாறு முன்னாள் இந்திய மத்திய அரசு அமைச்சரும், இ. காங்கிரஸ் முக்கிய பிரமுகருமான திரு. ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார். கடந்த வாரம் திருபார்கள் மத்தியில் உரையாற்றுகையில் அவர்
(4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியா முகாமில் 3000 பயணிகள்

[பூநகரி] கொழும்பில் இருந்து வடபகுதி வந்த 3000 திற்கும் மேற்பட்ட பயணிகள் வவுனியாவில் இரு வாரமாக ஏற்பட்டு வரும் இராணுவ நடவடிக்கை காரணமாக வவுனியா அகதிகள் முகாமில் தங்கி நிற்கின்றனர்.

வவுனியாப் பகுதிகளில் தொடர்ச்சியாக விமானத் தாக்குதல் நடத்தப்பட்டு வருவதனால் பயணிகளை மினிபஸ்
(4-ம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. வினாத்தாள்கள் 15-ல் யாழ் வரும்

[யாழ்ப்பாணம்] கல்விப் பொதுத் தராதர விசேட பரீட்சை (1990)யின் இரண்டாம் தொகுதி வினாத்தாள்கள் கொழும்பிலிருந்து கப்பலில் பருத்தித்துறை நோக்கிவந்துகொண்டிருக்கின்றன.

இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளருக்கு கொழும்பிலிருந்து பரீட்சை ஆணையாள
(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் தாக்குதல்: படையினர் பின்வாங்கினர்

[யாழ்ப்பாணம்] குப்பிளான் பகுதியிலிருந்து நேற்று நண்பகல் 11-30மணியளவில் வெளியேற முற்பட்ட படையினர், புலிகளின் கடும் தாக்குதலையடுத்து பின்வாங்கினர்.
(4-ம் பக்கம் பார்க்க)

# கடந்த மாதம் மட்டும் 5,000 இலங்கையர்கள் வெளிநாடுகளுக்கு பயணம்

[கொழும்பு]

கடந்தமாதம் வேலைவாய்ப்பு பெற்று ஐயாயிரம் இலங்கையர்கள் வெளிநாடு சென்றுள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக கடந்தமாதம் மட்டும் ஐயாயிரம் பேர் வெளிநாடு சென்றிருப்பதாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட பிரிவு தெரிவித்துள்ளது. [ரி]

## காகிதாதி, பிரயாணப் படி, வாடகை

# கிராம சேவையாளர்களுக்கு விரைவில் வழங்கப்படும்

[சித்தங்கேணி]

கிராமசேவை அலுவலர்களுக்கு அலுவலக வாடகை, பிரயாணப்படி, சம்பளபாக்கிப் பணம், காகிதாதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கிராமசேவை அலுவலர் சங்கத்தின் செயற்குழுவினர் பதில் அரசாங்க அதிபர் திரு: க. சண்முகநாதனை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

நிறுத்திவைக்கப்பட்ட அலுவலக வாடகை, பிரயாணப்படி மற்றும் சம்பளபாக்கிப் பணம் யாவும் வடக்கு கிழக்கு மாகாணசபையிடமிருந்து நிதி ஒதுக்கீடு கிடைத்ததும் வழங்கப்படும் என்றும் பதில் அரசாங்க அதிபர் உறுதியளித்துள்ளார்.

ஒரு மாதத்துக்கு மேல் பதில் கடமைபுரியும் கிராமசேவை அலுவலர்களுக்கு வேதனம் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (137)

# வரி விளம்பரம்


### தரன் படப் பிடிப்பாளர்

கலர்-கறுப்பு வெள்ளைப் படங்கள், றபர் சீல், பிளாஸ்ரிக் வேலை, விளம்பர போட், புளொக் டிசைன் மற்றும் ஓவிய வேலைகள். தரன் படப் பிடிப்பாளர், 87, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி 4673)

### வைத்தியம்

வேலணை வைத்தியர் இதம் பரப்பிள்ளை இராசரத்தினம் ஜே. பி. யாழ்ப்பாணத்தில் 121, இரண்டாம் குறுக்குத் தெருவில் வைத்தியசாலைக் கிளையை ஆரம்பித்துள்ளார். செங்கமாரி, சிறுபிள்ளைநோய்களில் திறமை பெற்றவர். சகல நோய்களுக்கும் சிகிச்சை பெறலாம். (ஜி-4715)

### விற்பனைக்கு

பயிர்களுக்கு ஊட்டமளிக்கும் அடிக்கட்டு உரமாகவும், பயிர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் பூச்சிபீடை கொல்லியுமாக நீமியா உரம் மீண்டும் விற்பனைக்கு. கிலோ பக்கெற் ரூபா 10-00 மட்டுமே. இணுவில், திருநெல்வேலி, யாழ் நகர் அண்ணா கோப்பிக்கடைகளிலும் கிடைக்கும். மில்க் வைற், யாழ்ப்பாணம். (ஏ-1285)

### நகைச்சுவை

தமிழில் நாடகங்களுக்கு மட்டுமல்ல, நகைச்சுவைக்கும் பஞ்சம். இரண்டையும் ஒருங்கே தருவன அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய வெட்டிக்காரர்கள் 25/-. முதலாம்பிள்ளை 30/- நூல்கள். (சி-4719)

# அறிவித்தல்

## யாழ். பல்கலைக்கழகம் இலங்கை

கீழ்க்குறிப்பிட்டுள்ள பரீட்சைகளுக்கு மாணவர்களிடமிருந்து கீழ்க்காணப்படும் திகதி வரை தேர்வு விண்ணப்பங்கள் பிரதிப் பதிவாளர்/தேர்வுகள் அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. கல்வி பட்டப்பின் டிப்ளோமா முழு நேரம், பகுதி நேரம் - பகுதி I, பகுதி நேரம் - பகுதி II - 31-05-91
2. இராமநாதன் நுண்கலை (இறுதி) 4-ம் ஆண்டுப் பரீட்சை - 24-05-91

மீள் பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு ரூபா 15/- வீதம் பணத்தை பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

பதிவாளர்.

1991-05-10.

(ஏ 1296)

## யா/வைத்தீஸ்வர வித்தியாலயம்

க. பொ. த. ப. (உ. த.) 1993. கலை, வர்த்தக வகுப்புகளிற் சில இடங்கள் இருக்கின்றன.

அனுமதிப் பரீட்சை: 20-05-1991 தொடக்கம் நடைபெறும்.

17-05-1991ற்கு முன்னர் விண்ணப்பங்கள் அலுவலகத்திற் கிடைக்கவேண்டும்.

கட்டணம்: 25/- ரூபா.

அதிபர்,
யா/வைத்தீஸ்வர வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

(ஏ-1295)

## பெண் காவல் துறையினருக்கான விண்ணப்பம்

(1) வயது எல்லை:
18 வயது முதல் 25 வயது வரை.

(2) உயரம்: 5 அடி 2 அங்குலம்

(3) கல்வித் தகைமை:
எட்டாம் வகுப்பு முதல் க. பொ. த. (சாதாரணம்) க.பொ.த. (உயர்தரம்) வரை.

விண்ணப்பதாரிகள் 15-05-91ற்குள் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். பிரதேசக்காரியாலயத்தில் சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்.

பொறுப்பாளர்
தமிழீழக் காவல் துறை.

(எ-1293)


# 'இ' அட்டைகள் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து முன்பு இடம்பெயர்ந்துசென்று பின் மீளக் குடியேறிவிட்ட மக்களிடமுள்ள 'இ' அட்டைகள் யாவும் 'அ' அட்டைகளாக மாற்றப்படவிருக்கின்றன. (153)

# சனசமூக நிலைய நன்கொடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் பதிவுசெய்யப் செய்யப்பட்ட சனசமூக நிலையங்களில் 50 வீதமான சனசமூக நிலையத்தினரே 1990 ஆம் ஆண்டுக்குரிய நன்கொடைப்பணத்தை இதுவரை பெற்றுக்கொண்டுள்ளனர்.

இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து ஏனைய சனசமூக நிலையங்கள் இந்த நன்கொடைப்பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

# பன்முக வரவு செலவுத் திட்டத்தில் வல்வை வைத்தியசாலைக்கு நிதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பன்முக வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு வல்வெட்டித்துறை வைத்தியசாலை சத்திர சிகிச்சைக்கூடம் கட்டுவேலைகளுக்காக 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் வைத்திய உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கென 7 லட்சம் ரூபாவும் இவ்வாண்டு பன்முக வரவுச் செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது. [153]

# பண்டத்தரிப்பு சந்தையில் தரகர்முறை ஒழிப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சந்தையில் தரகர்முறை கடந்த வாரம் தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளது. சந்தையில் தரகுவேலை எவரும் மேற்கொள்ளக்கூடாது என்று அறிவிக்கப்பட்டுள்ளதாக சந்தைப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை சந்தையில் ஒப்படை, உடைசல் தராசுகளை பாவிக்க வேண்டாம் என்றும் இவ்வாறு பாவிப்பது கண்டுபிடிக்கப்பட்டால் பறிமுதல் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [72]

# மென்பந்து கிரிக்கெட் இன்று இறுதியாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சாரணர் சங்கம் நல்லூர் திரிசாரணர் குழுவின் அனுசரணையுடன் நடைபெறும் மென்பந்து கிரிக்கெட் இறுதி ஆட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி. ப. 1-30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் மறைந்த மாவட்ட ஆணையாளர்களான அமரர்கள் செ. வரதலிங்கம், சச்சிதானந்தம், சாரணர்த் தலைவர் ஹரிசந்திரா ஆகியோரின் ஞாபகார்த்தமாக நடைபெறுகின்றது.

பாடசாலை சாரணர் துருப்புக்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ் இந்துக்கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதுகின்றது.

கழகங்களுக்கான இறுதிப் போட்டியில் நோதேன்ஸ் விளையாட்டுக் கழகமும், சென்

[3-ம் பக்கம் பார்க்க]

# மண்டலாபிஷேக பூர்த்திவிழா

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பெருங்காடு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் நடந்த முப்பத்து மூன்று குண்டங்களோடு கூடிய கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து நடைபெற்ற மண்டலாபிஷேகத்தின் பூர்த்தி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது. ஆலய பிரதம குரு கிரியா சிரோமணி ஸ்ரீனிவாச நாகேந்திரக்குருக்கள் இம்மண்டலாபிஷேகத்தைச் செய்துவைப்பார்.

# புதிய ரக நெல் விதைக்க விவசாயபீடம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கு இராமநாதபுரத்தில் வழங்கப்பட்ட 48 ஏக்கரில் தற்போது புதிய ரக பி. ஜி இன நெல்வகை விதைக்கப்பட்டு வருகின்றது. இம்மாதம் 20-ந் திகதிக்குள் 48 ஏக்கரிலும் நெல் விதைக்கப்படவிருக்கிறது.

டீசல், டிராக்டர் தட்டுப்பாட்டு காரணமாக விதைப்பதில் காலதாமதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. [153]

# கைதடியில் 18-ல் அந்தர் யோகம்

(யாழ்ப்பாணம்)

கைதடி சைவச்சிறுவர் இல்லத்தில் இம்மாதம் 18-ம் திகதி அந்தர் யோகம் நடைபெறவுள்ளது.

ஆத்மஜோதி நா. முத்தையா தலைமையில் நடைபெறவுள்ள இந்த அந்தர் யோகத்தில் நூறுபேர் பங்குபற்றுவார்கள் என்று சைவச் சிறுவர் இல்ல இயக்குநர் ஆறுமுகம் கந்தையா தெரிவித்தார்.

பிரார்த்தனை, நாடிசுத்தி நாமஜெபம், தியானம், உபந்நியாசம், பஜனை போன்றவை இந்நிகழ்ச்சியில் நடத்தப்படும்.

அந்தர் யோகத்தில் கலந்துகொள்ள விரும்புவர்கள் இம்மாதம் 15-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

# இராசி பலன்

**12-05-1991**
**ஞாயிற்றுக்கிழமை**

திரயோதசி பி. ப. 2-25 வரை.
ரேவதி மு. ப. 8-26வரை.
அமிர்தயோகம்.
இராகுகாலம் மாலை 4-24 முதல் 5-54 வரை.
சுபநேரம் காலை 8-54 முதல் 10-54 வரை.

மேஷம்- காரியவெற்றி, சபையோர் பாராட்டு, தொழில்மேன்மை.

இடபம்- தயாளசிந்தை, பொதுசனவிரோதம், அலைச்சல்.

மிதுனம்- குடும்ப மகிழ்ச்சி, பணவரவு, தொழில்துறை முதலீடு.

கடகம்- கற்பனை மிகுதி, வாக்குவன்மை, நோய் துன்பம்.

சிம்மம்- முரண்பாடு, தொழில் சிக்கல். குடும்பப் பிரிவு.

கன்னி- குடும்பத்தொல்லை, மானபங்கம், அதிகார பலிதம்.

துலாம்- மனமகிழ்ச்சி, புத்திரர் பெருமை, தொழில் சிறப்பு.

விருச்சிகம்- பொருள்லாபம், விரோத உணர்வு, தான தர்மம்.

தனுசு- தொழில்கஷ்டம், வாக்குபலிதம், குடும்ப செலவு.

மகரம்- உறவாளர் விரோதம், பயண அலைச்சல், கவலை.

கும்பம்- வாழ்க்கை வசதி, அயலவர் உதவி, நண்பர்கள் சகாயம்.

மீனம்- பணத்தகராறு, குடும்பகவலை, வைத்தியச் செலவு.

• ஜோஸ்யர்

## கிளிநொச்சி விவசாயபீட காணியில் அத்துமீறி குடியேறிய குடும்பங்களில் 9 குடும்பங்கள் வெளியேறின

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி விவசாயபீடத்திற்கு கிளிநொச்சி அரசாங்க அதிபரால் வழங்கப்பட்ட கண்டிவீதி 155ம் கட்டை 25 ஏக்கர் காணியில் அத்துமீறி இருந்துவந்த 20 குடும்பங்களில் 9 குடும்பங்கள் அந்தக் காணியைவிட்டு வெளியேறி புதிதாக தமக்கு ஒதுக்கப்பட்ட காணியில் குடியேறியுள்ளார்கள். மிகுதி 11 குடும்பங்களும் யாழ். பல்கலைக்கழக நஷ்டஈட்டைபெற்ற பின்பும் வெளியேறாமல் இன்னும் அங்கு இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக பல்கலைக்கழக விவசாயபீடம் அக்காணிகளில் அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிக்க முடியாமல் இருக்கிறது.

தற்போது அங்கு இருக்கும் குடும்பங்களால் பல்கலைக்கழக காணியிலுள்ள பெறுமதியான மரங்களும் சட்டவிரோதமாக தறிக்கப்பட்டு அகற்றப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

பல்கலைக்கழகம் 20 குடும்பங்களுக்கும் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை நட்டஈடாக வழங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது. (153)

## உரப்பசளைகளுக்கு கடும் தட்டுப்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் சிறுபோக நெற்செய்கைக்கு தேவையான நிலப்பசளை உரவகைகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வருடம் சிறுபோக நெற்செய்கையும் ஆரம்பத்திலே பாதிப்படையும் நிலையை எட்டியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (83)

## வேறிடங்களுக்குச் செல்ல அகதிகள் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட பாடசாலைகளில் தங்கியிருக்கும் 8 ஆயிரத்திற்கு மேற்பட்ட தீவுப்பகுதி அகதிகளை யாழ் புகையிரத நிலையப்பகுதிக்கு மாற்றும் முயற்சியில் செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டுள்ளது.

பாடசாலைகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகியதால் மாணவர் கல்வி கற்பதற்கு இவர்கள் தங்கியிருப்பது பெரும் இடைஞ்சலாக இருக்குமென்றும் கருதப்படுகிறது.

அகதிகள் வேறு பிற இடங்களில் முகாமிட்டு தங்குவதற்கு மறுத்து வருவதனால் பெருந்தொகையான அகதிகளை உரிய இடம் கொடுத்து ஓரிடத்தில் தங்கவைப்பது மாநகருக்குள் மிகக் கஷ்டமாக உள்ளதென செஞ்சிலுவைச் சங்க மற்றும் ஸ்தாபன உயரதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அகதிகள் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் முகாமிட்டிருப்பதனையே விரும்புவதனாலும் போதனா வைத்தியசாலை அருகில் இருப்பதனாலும் இவர்களை நாலுக்கப்பாற்பட்ட இடங்களில் முகாமமைத்து தங்க தயக்கம் காட்டுகின்றனர்.

இதனால் உயரதிகாரிகளுக்கு தர்மசங்கடமான நிலை தோன்றியுள்ளது. சென் மேரிஸ் வித்தியாலயத்தில் தங்கியிருந்த தீவக அகதிகளில் பெரும்பாலானோர் கைதடிப்பகுதிக்கு செல்ல மறுப்பு தெரிவித்ததனாலேயே இவர்கள் விருப்பப்படி யாழ். இந்துக்கல்லூரியில் தங்க வைக்கப்பட்டனர். (56)

## இரவு நேரத்தில் தேர்தல் பிரசாரம்

(சென்னை)

அ.தி.மு.க. பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதாவும், தி.மு.க. தலைவர் மு. கருணாநிதியும் இரவுநேரத்தில் கூடுதலாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

மாலை வேளைகளில் தேர்தல் பிரசார வேலைகளை ஆரம்பிக்கும் இவர்கள் தமக்கென தனித்துவமான வாகனங்களை பாவித்து இரவில் கூடுதலான பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரு தலைவர்களும் தங்களுடன் பெண்களை உதவியாளர்களாக அழைத்துசெல்கின்றனர்.

ஜெயலலிதா, உதவியாளர் சசிகலாவுடன் செல்கின்றார். திரு. கருணாநிதி, திருமதி தயாளு கருணாநிதியுடன் பிரசாரத்திற்கு செல்கின்றார்.

தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையே இருவரும் தங்கள் பேச்சுவன்மையால் விளக்கி வருகின்றனர்.

### மென்பந்து

(2ம் பக்கத் தொடர்ச்சி)

றலைற்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதுகின்றது. பிரதம விருந்தினராக யாழ். இந்து அதிபர் அ. பஞ்சலிங்கம் கலந்து கொள்வார்.

## மினிபஸ் சேவை

[யாழ்ப்பாணம்]

புதுக்குடியிருப்புப் பகுதி பயணிகளின் நன்மை கருதி நாளை திங்கட்கிழமை தொடக்கம் மினிபஸ் சேவை ஆரம்பிக்கப்படுகின்றது.

சங்குப்பிட்டியிலிருந்து புதுக்குடியிருப்புக்கு இரவு 9மணிக்கு இந்தப் பஸ் புறப்படும்.

புதுக்குடியிருப்பிலிருந்து சங்குப்பிட்டிக்கு பி. ப. 3மணிக்கு அது மீண்டும் சேவையில் ஈடுபடுமென பூநகரி போக்குவரத்துப் பகுதியினர் அறிவிக்கின்றனர். [23]

## "நாம் ஆட்சிக்கு வந்தால் மலிவு விலை மதுக்கடைகளை உடனடியாக மூடுவோம்!"

### - செல்வி ஜெயலலிதா

(சென்னை)

நாம் ஆட்சிக்கு வந்தால் முதல் வேலையாக மலிவு விலை மதுக் கடைகளை உடனடியாக மூடுவோம் என்று அருப்புக் கோட்டை சாத்தூரில் நடந்த அ. தி. மு. க. தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய அ. தி. மு. க. செயலர் செல்வி ஜெயலலிதா கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: கடந்த இரண்டு ஆண்டு தி. மு. க. ஆட்சிக் காலத்தில் கருணாநிதி புகுத்திய மிக பெரிய தீமை மலிவு விலை மதுக்கடைகளை திறந்ததேயாகும். இதனால் தாய்மார்கள் எத்தனையோ இன்னலுக்காளாக்கப்பட்டுள்ளனர். எண்ணற்ற குடும்பங்கள் பாழாகிவிட்டன.

கருணாநிதியை தோல்வி பயம் வாட்டுகிறது. தோல்வி அடையப்போவது நிச்சயம் என்று தெரிந்துகொண்டு என்னென்னவோ பேசுகிறார்.

நாம் எதிர்வரும் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்தால் தமிழக சட்டசபையால் சபாநாயகருக்கே மரியாதை இருக்காதாம். சபாநாயகரின் நாற்காலி முதல்வரின் ஆசனத்திற்கு உயரமாக

**அண்ணல் காந்தியடிகள்**

**கண்ட கனவு நிறைவேறி**

**கிராமங்கள் மேம்பாடு**

**அடைய சிறப்புத் திட்டங்களை**

**செயற்படுத்துவோம்**

இருக்கக்கூடாது என்று சொல்லி அதை நான் இறக்கி வைக்க சொல்வேனும்.

எம். எல். ஏக்களை தரையில் உட்காரவேண்டுமென உத்தரவிடுவேனும் என்று கூறுகிறார்.

எதிர்வரும் தேர்தலில் நாம் ஆட்சிக்கு வந்தால் கூட்டுறவு சங்கங்களில் புகுந்துள்ள சமூக விரோதிகள் களைந்தெடுக்கப்பட்டு வெளியேற்றப்படுவார்கள். காவல்துறையும், அரசு நிர்வாகமும் மக்கள் மீது தவறான முறையில் அதிகாரம் செலுத்த அனுமதிக்கமாட்டோம்.

அண்ணல் காந்தியடிகள் கண்ட கனவு நிறைவேறி கிராமங்கள் மேம்பாடு அடைய சீரும் சிறப்புமிக்க திட்டங்களை கொண்டுவந்து செயல்படுத்துவோம்.

துரோகிகள் கும்பல், எம். ஜி. ஆர். இருந்தபோதும் சரி, மறைந்த பின்னும் சரி என்னை எப்படியாவது அரசியலைவிட்டு விரட்டியடிக்கவேண்டும்என்று கங்கணம் கட்டிக்கொண்டு திட்டமிட்டு செயல்பட்டு வருகிறார்கள்.

என்னை அசிங்கப்படுத்தி அவமானப்படுத்தி என்னைப் பற்றிய அவதூறுகளை பத்திரிகை வாயிலாக பரப்பி மக்கள் மத்தியில் என்மீது வைத்திருக்கும் அன்பை எப்படியாவது குறைக்கவேண்டும் என்பதற்காக எத்தனையோ திட்டங்களை தீட்டிவருகின்றனர். ஆனால் அவர்களுடைய எண்ணங்கள் இன்றுவரை ஈடேறவில்லை.

நாம் ஆட்சிக்கு வந்தால் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதுடன், ஏழைகளுக்கு இலவசமாக வீடு கட்டிக்கொடுப்போம்.

விவசாயிகள் கடன் அனைத்தும் ரத்துச்செய்யப்படும்.

வேலைக்குச் செல்லும் பெண்களும் மாணவர்களும் நடுத்தர குடும்பத்தினரும் பயன்படுத்தும் சிறிய இரு சக்கர வாகனத்திற்கு சாலை வரியை ரத்துச்செய்வோம்.

எம். ஜி. ஆர். உருவாக்கிய அ. தி. மு. கவை வீழ்த்துவதற்கு ஒரு துரோக கும்பலுடன் கருணாநிதி கைகோர்த்துள்ளார். அவரது பகல் கனவு ஒருகாலும் பலிக்காது.

### தமிழ்நாடு தேர்தல் களம்

## தமிழர் புனர்வாழ்வு கழகம் அகதிகளுக்கு உதவி

(புங்குடுதீவு)

தீவுப்பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக புங்குடுதீவு பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து யாழ் புகையிர நிலையத்தில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு 'தமிழர் புனர்வாழ்வு கழகம்' உதவியளித்து வருகிறது.

இந்தவார முற்பகுதியில் புனர்வாழ்வுக்கழக தொண்டர்களினால் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

மேற்படி கழகத்தவர் ஒருவருக்கு தலா ஒரு கிலோ மா, அரிசியும் மற்றும் குடும்பம் ஒன்றிற்கு ஒரு பைக்கற் பால்மா, பயறு ஒரு கிலோ; பருப்பு அரைக்கிலோ. கருவாடு அரை கிலோ, சீனி ஒரு கிலோவும் வழங்கினார்கள்.

அங்கு தங்கியிருக்கும் மக்களுக்கு மலசலகூட வசதிகளும், பாவிக்கப்படாமல் இருந்த கிணறுகளும் துப்பரவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு யாழ். மாநகரசபை பொது சுகாதார பகுதியினரும் அம்முகாமில் தங்கியிருப்பவர்களுக்குசுகாதார வசதிகளையும் செய்து கொடுப்பதற்காக எந்நேரமும் அம்முகாமில் தங்கியிருந்து சிகிச்சைகளை அளித்து வருகின்றார்கள்.

யாழ். மாநகரசபை சுகாதார பகுதியினர் பாவிக்கப்படாமலிருந்த மலசலகூடம், கிணறுபோன்றவற்றை திருத்தியமைக்கும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் அகதிகளுக்கு சமையல் பாத்திரங்களையும் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். [101]

## கடற்றொழிலாளர் பாதிப்பு விபரம் சேகரிப்பு

(வடமராட்சி)

கடந்த கால அசம்பாவிதங்களால் தொழில் ரீதியாகவும் உடல் உடைமைகள் ரீதியாகவும் பாதிப்புற்ற கடற்றொழிலாளர்களின் விபரங்கள் கடற்தொழிலாளர் சமூக அபிவிருத்தி அமைப்புக்களின் ஒன்றியத்தின் உதவியுடன் கடற்றொழில் பரிசோதகர்கள் திரட்டவுள்ளனர். [51]

## வீடமைப்பு கடன்களை வீடமைப்பு அதிகாரசபை அறவிடும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தேசிய வீடமைப்புத் திணைக்களம் மூடப்பட்டுள்ளதால் இத்திணைக்களத்தின் சகலபொறுப்புக்களும் யாழ் மாவட்டத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தேசிய வீடமைப்புத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வீடமைப்புக்கடன் அறவிடல்கள் இனிமேல் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையே மேற்கொள்ளுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். தேசிய வீடமைப்புத் திணைக்களத்தில் வீடமைப்புக்கடன்பெற்றவர்கள் தமது கடன்களை மீளச்செலுத்தவும் ஈட்டு உறுதிகளை மீட்பதற்கும் யாழ். மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் தொடர்புகொள்ளவேண்டும். (54)

## ட்ரக் மீது தாக்குதல் 19 பொலிஸார் பலி

(மணிலா)

நீதிமன்றிலிருந்து சென்று கொண்டிருந்த பொலிஸார் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 19 பொலிஸார் ஸ்தலத்தில் பலியாயினர்.

மலைப்பகுதியிலிருந்து கம்யூனிஸ்ட் கெரில்லாக்கள் சுற்றிவளைத்து கடும்தாக்குதலை நடாத்தியதிலேயே இவர்கள் கொல்லப்பட்டனர்.

நான்கு பொலிஸார் படுகாயமடைந்தனர். (பூ)

## 50 இந்திய டாக்டர்கள் இலங்கை வருகிறார்கள்

[கொழும்பு]

இலங்கையிலுள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்ற இந்தியாவிலிருந்து ஐம்பது டாக்டர்கள் வரவிருக்கிறார்கள்.

நாட்டில் நிலவும் வைத்தியர்களின் பற்றாக்குறையை நீக்குவதற்காக சுகாதார அமைச்சு இந்தியாவிலிருந்து ஐம்பது டாக்டர்களை அழைக்கிறார்கள்.

நாட்டில் நிலவும் வைத்தியர்களின் பற்றாக்குறையை நீக்குவதற்காக சுகாதார அமைச்சு இந்தியாவிலிருந்து வைத்தியர்களை அழைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

காது, தொண்டை, சத்திரசிகிச்சை முதலான வைத்திய பிரிவுகளில் நிபுணத்துவம் பெற்ற டாக்டர்களே இலங்கைக்கு அழைக்கப்படவுள்ளார்கள். (ரி)

# நெடுந்தீவுக்கு உணவு அனுப்ப நயினை கடற்படையினர் தடை!

(புங்குடுதீவு)

நயினாதீவில் முகாமிட்டிருக்கும் கடற்படையினர் தங்களுக்கு 2,000 வெற்றுச் சாக்குகள் வேண்டுமென நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கத்திடம் கோரியுள்ளனர்.

மேற்படி சங்கத்தினர் சாக்குகளை கொடுக்க தாமதித்ததினால் நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கத்துக்கான உணவுப் பொருட்களை கொண்டுசெல்ல அனுமதி வழங்கவில்லை.

கடந்த 3 வாரங்களுக்கு மேலாக அப்பகுதிக்கான உணவுப்பொருட்கள் கொண்டு செல்லமுடியாத நிலையில் புங்குடுதீவு பகுதியில் கஞ்சிப் படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையினால் நெடுந்தீவுப் பகுதியில் உணவுப் பொருட்களுக்கு பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

200 சாக்குகளையும் வழங்க சங்கம் சம்மதம் தெரிவித்துள்ளபோதிலும் பொருட்களைக் கொண்டுசெல்ல அனுமதி கிடைக்கவில்லை. [101]

## ஊர்காவற்றுறையில் 4 வயோதிபர்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை இராணுவத்தினரிடம் சிக்கிய நான்கு வயோதிபர்கள் கடந்த எட்டு மாதங்களாயும் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

திரு. சவரிமுத்து [வயது 58] திரு. ஜோர்ஜ் (வயது 56), திருமதி செறுப்பின் [வயது62) திருமதி ஞானம் (வயது 60), ஆகியோரே அகப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு இதுவரை என்ன நடந்தது என்பதும் தெரியவில்லை. [59]

## ஊழியர் சேமலாப நிதி இந்த மண்ணில் வைப்பிலிடப்படும்

(யாழ்ப்பாணம்)

"வடபிராந்திய வர்த்தக ஊழியர்களின் கோரிக்கைகள் நியாயமானவை அதைப்பற்றி வர்த்தக சங்கத்துடன் கலந்துரையாடி வர்த்தக ஊழியர்களுக்கு நன்மை கிடைக்கக் கூடிய விதத்தில் செயலாற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம்"

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தொழிற் சங்கப் பொறுப்பாளர் திரு. ரவி மாஸ்ரர் உரையாற்றுகையில் தெரிவித்தார். வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. இ சுப்பையா தலைமையில் யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்றது.

திரு. ரவி மாஸ்ரர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: வர்த்தக ஊழியர்கள் ஒற்றுமையாக, ஒன்றுபட்டுச் செயல்படவேண்டும்.

இனிமேல் ஊழியர்களின் சேமலாபநிதிகள் எமது மண்ணில் உருவாக உத்தேசிக்கப்பட்டுள்ள வங்கிகளில் வைப்பிலிட ஒழுங்குகள் செய்யப்பட்டு உத்தேசிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா அரசு பிரகடனப் படுத்தும் விடுமுறை தினங்களைப் பகிஷ்கரித்து எமது மண்ணில் சமய கலாசார ரீதியான விடுமுறை தினங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றார். (153)

## 'ஷெல்' தாக்குதல்

(வேலணை)

சரவணை-மேற்குப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்றுப்பிற்பகல் மூன்றுக்கும் மேற்பட்ட ஷெல்தாக்குதல்களை மேற்கொண்டனர்

இவ்வாறு மேற்கொண்ட தாக்குதலில் பல குடிமனைகள் சேதத்திற்குள்ளாகின. (75)

## ஆஸி. மனித

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பான கடிதமொன்று அண்மையில் அவுஸ்திரேலிய பிரதமர் திரு பொப் ஹொக்கிற்கும், 'காமன் வெல்த்' செயலர் திரு. சிறீதத் ரம்பாலுக்கும் அனுப்பப் பட்டிருந்தது.

மேலும் பல சர்வதேச அமைப்புகளும் இம்முயற்சியில் ஆஸ்திரேலிய மனித உரிமைகள் குழுவை ஈடுபடுமாறும் வற்புறுத்தியுள்ளன. (சி)

## அவசரகால

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் நடைபெறுவதைத் தடுக்கும் விதமாகவே இந்தச் சட்டவிதிகள் மீண்டும் அமுல்படுத்தப்பட்டன என அறிவிக்கப்பட்டது.

ஊர்வலங்கள் செல்வதற்கும் சுலோக அட்டைகளை பார்வைக்கு வைப்பதும் சம்பந்தமான சட்டவிதிகளே மீண்டும் அமுலுக்கு வந்துள்ளன. அத்துடன் பொதுக்கூட்டங்களை வைப்பதற்கும், சட்டவிரோதமாகக் கூடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது

இதேவேளையில் நேற்றைய தேர்தல் அசம்பாவிதங்கள் எதுவுமின்றி அமைதியான முறையில் நடைபெற்றதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

## உள்ளூராட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விதிகள் நேற்று நள்ளிரவு முதல் மீண்டும் அமுலுக்கு வந்ததாகவும் அரசு நேற்று அறிவித்தது.

வடக்கு-கிழக்கு தவிர்த்த நாட்டின் 17 மாவட்டங்களுக்கான உள்ளூராட்சி சபைகளுக்கானதேர்தல் நேற்று நடைபெற்றது.

மொத்தம் 236 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த 85 லட்சம் வாக்காளர்களில் 75 சதவீதமானவர்கள் நேற்று வாக்களித்ததாக தெரிவிக்கப்பட்டது.

காலை ஏழு மணிக்கு ஆரம்பமான வாக்களிப்பு மாலை நான்கு மணி வரை நடைபெற்றது. வாக்களிப்பு நேரத்தில் எந்தவிதமான அசம்பாவிதங்களோ வன்முறைகளோ இடம் பெறவில்லையெனவும் அறிவிக்கப்பட்டது.

எனினும் தேர்தல் முடிவடைந்த பிறகு நாட்டில் சட்டத்தை தபேணிப் பாதுகாக்கும் வகையில் அரசு ஏற்கனவே தளர்த்தியிருந்த அவசரகாலச் சட்டவிதிகளைநேற்று அமுலுக்குக்கொண்டுவந்ததுடன் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மேற்கொண்டது.

இதேவேளையில் தேர்தல் சம்பந்தமான முறைகேடுகள் குறித்து தேர்தலை கண்காணிப்பதற்கு இங்கு வந்திருக்கும்சர்வதேச கண்காணிப்புக்குழுவின் கவனத்துக்கு எதிர்கட்சிகள் கொண்டு வந்திருப்பதாகவும் அறியவருகிறது

## ஐ. தே. க. முன்னணி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியின்றித் தெரிவு.

★ அம்பாந்தோட்டை மாவட்டம் – அம்பாந்தோட்டை நகரசபை ஐ. தே. க- 5, ஸ்ரீ. ல. சு. க-3, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் – 1.

★ பதுளை மாவட்டம்; பண்டாரவளை நகர சபை; ஐ. தே. க - 6, சுயேட்சை II - 3;

★ கண்டி மாவட்டம்; வத்தேகம நகரசபை; ஐ.தே.க.– 6, ஸ்ரீ. ல. சு. க. - 3

★ அம்பாந்தோட்ட மாவட்டம்; தங்கல்லை நகர சபை; ஐ. தே. க.-5. சுயேட்சை I - 3, ஸ்ரீ.ல.சு.க -1.

★ பொலன்னறுவை மாவட்டம்; ஹிங்குராங்கொடை; பிரதேச சபை ஐ. தே. க - 10, ஸ்ரீ ல. சு. கட்சி - 7. ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி - 1.

★ நுவரெலியா மாவட்டம்; தலவாக்கொல்ல ஹிந்துல நகரசபை; ஐ. தே. கட்சி-6, சுயேட்சைக் குழு(I)-2, சுயேட்சைக் குழு (II) - 1.

## க. பொ. த.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரால் அனுப்பிவைக்கப்பட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தகவலில் மேலும் தெரிவித்திருப்பதாவது; அநேகமாக இம்மாதம் 15ம் திகதி விஞ்ஞாபனம் கொண்டு வரும் கப்பல் இங்குவருமென எதிர்பார்க்கப்படுகிறது. பரீட்சைபற்றியதிகதி பரீட்சை ஆணையாளரால் எவ்வேளையிலும் அறிவிக்கப்படலாமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (152)

## புலிகளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்னாரில் ஒரே இடத்தில் 50 படையினர் கொல்லப்பட்டனர்.

புலிகள் தமது பலத்தை ஒன்றுசேர்த்துத் தாக்குகிறார்கள். புலிகளின் தலைவர் பிரபாகரனை பிடிக்க முடியவில்லை. அது இயலாத காரியம். புலிகளை ஒருநாளும் தோற்கடிக்க முடியாது. இன்றுபிரபாகரனே பலம் வாய்ந்தவராகத் திகழ்கிறார்.

இந்த நாட்டின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரையே நாட்டின் தலைநகரில் குண்டு வைத்துப் புலிகள் கொன்று விட்டார்கள். அவருக்கே இந்தக்கதி என்றால் சாதாரண மக்களின் பாதுகாப்பு குறித்து நாம் என்ன கூறுவது?

சிங்களமொழி அரசகரும மொழியாக்கப்பட்டதாலேயே இனப்பிரச்சினை ஏற்பட்டதாக ஜனாதிபதியும், அமைச்சர்களும் கூறுகிறார்கள். சிங்களத்தை அரச கருமமொழியாக்கியதாலேயே 'வேட்டியும், நெஷனலும்' அணியும் பிரேமதாஸா இந்நாட்டின் ஜனாதிபதியாக முடிந்தது.

இனப்பிரச்சினையால் நாடு படுபாதாளத்திற்குள் வீழ்ந்து விட்டது. இதற்கு பொறுப்பேற்று அரசு உடனடியாக இராஜினாமா செய்யவேண்டும் என்றார். (சி)

## தமிழர் தம்மை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்; இலங்கைப் பிரச்சினைக்குப் நீதியாக ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டால் அது முத்தரப்பு ஒப்பந்தமாக இருக்க வேண்டும். இலங்கை அரசுக்கும், போராளிகளுக்குமிடையில் ஒப்பந்தம் ஏற்பட்டால் இந்தியா தனது நல்லுதவியை அளிக்கவேண்டும்.

இலங்கையிலிருந்து அகதிகள் வந்தாலும் போராளிகள் வந்தாலும் இந்தியா அவர்களுக்குப் புகலிடம் வழங்க வேண்டும். தற்போது முகாம்களில் வைக்கப்பட்டுள்ள போராளிகள் விரும்பினால் இலங்கைக்குத் திரும்ப அவர்களுக்கு அனுமதியளிக்கவேண்டும் என்றார். (சி)

## பரிசளிப்பு விழா

[யாழ்ப்பாணம்]

யாழ். இலக்கிய வட்டத்தின் கலாசாரப் பேரவை நடாத்தும் தமிழ் சாகித்திய பரிசளிப்புவிழா இன்று ஞாயிறு பிற்பகல் 3-00 மணியளவில் நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

## புலிகள் தாக்குதல்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

10 நிமிடநேரம் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். பின்வாங்கிய படையினர் காவலரணிலிருந்து சரமாரியாக துப்பாக்கி சூடு நடாத்தினார்கள். (ஏ)

## படை முகாமருகில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆணினதும், பெண்ணினது மான இச்சடலங்கள் அடையாளம் காணப்படமுடியாத அளவிற்கு கிடந்தன.

இப்பகுதியில் கிடந்த சடலங்கள்தமிழர்களது சடலமாயிருக்கலாமென தெரிவிக்கப்படுகிறது.

## யூன் மாதம் வரை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தனும் ஜனாதிபதி பிரேமதாசா அரசியல் தீர்வை நாடக்கூடிய சாத்தியமுள்ளதாகவும் வெரித்தாஸ் கூறியது.

வடபகுதியில் தற்போது கடும் யுத்தம் இடம்பெறுவதாகவும் அச்செய்தி கூறியது.

## வவுனியா

1ம் பக்கத் தொடர்ச்சி)

களில் ஏற்றிவர முடியாதநிலையும் ஏற்பட்டு வருகிறது இதனால் கொழும்பிலிருந்து வந்த பயணிகள் வவுனியாவில் சில தினங்கள் தங்கி நின்றபின் வடபகுதி செல்ல முடியாத நிலையில் மீண்டும் கொழும்பு திரும்புகின்றனர். [23]

## கரும்புலிகள் எழுச்சிக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

கடற்புலிகளின் எழுச்சி நாளும் மாபெரும் எழுச்சிக் கூட்டமும் 14-ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை யாழ். குடா எங்கும் நடைபெறவுள்ளது.

கரும்புலிகளான கப்டன் ஜெயந்தன், கப்டன் சிதம்பரத்தின் எழுச்சிக்கூட்டம் வலிகாமத்தில் வட்டு. இந்து கல்லூரி மைதானத்திலும், வடமராட்சியில் வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் கழக மைதானத்திலும், தென்மராட்சியில் மட்டுவில் சரஸ்வதி வித்தியாலய மைதானத்திலும் நடைபெறவுள்ளது.

## அறிவித்தல்

யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள் செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர்களுக்கு மட்டும்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை [14-05-91] மாலை 3.30 மணிக்கு சங்க பணிமனையில் கிளைச் சபைக்குரிய நிர்வாகத் தெரிவு நடைபெறவிருப்பதால் அங்கத்தவர்கள் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படுகின்றார்கள்.

- செயலாளர்

செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணம்.
11-5-1991

[எ 1297]

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியவதி கோபாலசிங்கம்

கல்வளை சண்டிலிப்பாயைச் சேர்ந்த சிவபாக்கியவதி காலமாகிவிட்டார். அன்னார் Dr. T கோபாலசிங்கம் [J. P], அவர்களின் அன்பு மனைவியும், வசந்தகுமாரி, தயாவதனி, சிவலோசனி, Dr. சிறீதரன், பிரபாகரன் ஆகியோரின் தாயாரும், குணரத்தினம், மனோகரன், வத்சலகுமாரி, வசந்தா ஆகியோரின் மாமியும், ஒளவை, ராதை, ஈசன், லக்ஷ்மன், தக்ஷாயினி, சஜீவன் ஜாமினி, வினோத் ஆகியோரின் பேர்த்தியும், டாக்டர் P. செல்லையா, மனோன்மணி அம்மாள் ஆகியோரின் மகளும், காலஞ்சென்ற வ. த. பிராஜா, பொன்னம்மா ஆகியோரின் மருமகளும், மார்க்கண்டேயர் திருமதி புஷ்பவதி அருளானந்தம், இராமகிருஷ்ண ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் [11-5-91] சனிக்கிழமை கல்வளை சண்டிலிப்பாயில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

கல்வளை,
சண்டிலிப்பாய்.
[சி 47-4]

தகவல்:
Dr. T. கோபாலசிங்கம்
[கணவன்]

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under licence number B/168806/81.